கிருமாம்பாக்கம்

# ராஜீவ்காந்தி பொறியியல் கல்லூரியில் இணையதள வழிக் கல்வி தொடக்கம்



▶▶ புதுச்சேரி கிருமாம்பாக்கம் ராஜீவ்காந்தி பொறியியல் கல்லூரியில் கணிப்பொறி சிறப்பு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

■ புதுச்சேரி

புதுச்சேரி அருகே உள்ள கிருமாம்பாக்கம் பொறியியில் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் மும்பை ஐஐடியின் அங்கீகாரம் பெற்று இணைய தளம் வழியாக நடத்தப்படும் ஸ்போக்கன் டுடோரியல் என்னும் கல்வி முறை இந்த ஆண்டு முதல் தொடங்கப் பட்டிருக்கிறது.

இதன் தொடக்க நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக மும்பை ஐஐடியை சேர்ந்த ப்ரீத்தி நாயுடு கலந்து கொண்டார். மாணவர்களிடையே பேசிய ப்ரீத்தி, இக்கல்லூரி மாணவர்கள் ஸ்போக்கன் டுடோரியல் கல்விமுறையை நன்கு பயன்படுத்தி பலன் பெற வேண்டும் என்று கூறினார்.

இக்கல்லூரி மாணவர்களுக்கு முன்னரே, மும்பை ஐஐடி ஸ்போக்கன் டுடோரியல். மூலம் பல்வேறு கணிப்பொறி வகுப்புகள் நடத்தப்பட்டு ஆன்லைன் தேர்வுகள் நடைபெற்றன. இத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு இந்நிகழ்ச்சியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிர்வாகி பாஸ்கரன் தலைமை வகித்தார். முதல்வர் விஜய கிருஷ்ணா ராபாகா முன்னிலை வகித்தார் மற்றும் துணைத்தலைவர் ஜயப்பன் வரவேற்றார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணை பேராசிரியர் வினோத்குமார் செய்திருந்தார்.



### ராஜீவ்காந்தி என்ஜினீயரிங் கல்லூரியில்

# மும்பை ஐ.ஐ.டி.யின் இணையதள வழி கல்வி தொடக்கம்

பாகூர், ஜூலை.28–

புதுவை மாநிலம் கிருமாம்பாக்கத்தில் உள்ள ராஜீவ்காந்தி என்ஜினீயரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் மும்பை ஐ.ஐ.டி.யின் அங்கீகாரம் பெற்று இணையதளம் வழியாக கல்வி நடத்தப்படும் 'ஸ்போக்கன் டுடோரியல்' என்ற கல்வி முறையில் நடப்பு கல்வி ஆண்டுக்கான தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிர்வாகி பாஸ்கரன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் விஜய கிருஷ்ணா ராபாகா ஆகியோர் முன்னிலை வகித்தார். துணை முதல்வர் அய்யப்பன் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மும்பை ஐ.ஐ.டி.யை சேர்ந்த பிரீத்தி நாயுடு கலந்துகொண்டு, இந்த கல்வி முறையை மாணவர்கள் பயன்படுத்தி பலன் பெற்று வருகின்றனர். புதுவை மாநிலத்தில் இக்கல்லூரியில் தான் 3,800–க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் இக்கல்வி முறையை கற்று பயன்பெற்று வருவதாக பாராட்டினார்.

இந்த கல்லூரி மாணவர்களுக்கு ஸ்போக்கன் டுடோரியல், ஐ.ஐ.டி. மும்பை மூலம் பல்வேறு கம்ப்யூட்டர் வகுப்புகள் நடத்தப்பட்டு ஆன்லைன் தேர்வுகள் நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற மாணவ–மாணவிகளுக்கு நிகழ்ச்சியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை துணை பேராசிரியர் வினோத்குமார் செய்திருந்தார்.



ராஜீவ்காந்தி என்ஜினியரிங் கல்லூரியில்

# நடப்பு கல்வி ஆண்டுக்கான ஐ.ஐ.டி.யின் இணையதள வழி கல்வி தொடக்கம்

புதுச்சேரி, ஜூலை 26–

கிருமாம்பாக்கம் ராஜீவ்காந்தி என்ஜினியரிங் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் மும்பை ஐ.ஐ.டி.யின் அங்கீகாரம் பெற்று இணையதளம் வழியாக நடத்தப்படும் ஸ்போக்கன் டுடோரியல் என்ற கல்வி முறையின் நடப்பு கல்வி ஆண்டுக்கான தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக மும்பை ஐ.ஐ.டி.யை சேர்ந்த ப்ரீத்தி நாயுடு கலந்து கொண்டு, இந்த கல்வி முறையை மாணவர்கள் பயன்படுத்தி பலன் பெற்று வருவதாக கூறி பாராட்டினார்.

இந்த கல்லூரி மாணவர்களுக்கு ஸ்போக்கன்–டுடோரியல், ஐ.ஐ.டி.. மும்பை மூலம் பல்வேறு கம்ப்யூட்டர் வகுப்புகள் நடத்தப்பட்டு ஆன்–லைன் தேர்வுகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்கு நிகழ்ச்சியில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு கல்லூரியின் நிர்வாகி பாஸ்கரன் தலைமை தாங்கினார். முதல்வர் விஜய கிருஷ்ணா ராபாகா முன்னிலை வகித்தார். துணை முதல்வர் அய்யப்பன் வரவேற்றார். இதற்கான ஏற்பாடுகளை துணை பேராசிரியர் வினோத்குமார் செய்திருந்தார்.